உங்களுடைய ஆத்துமா இந்த நித்திய இளைப்பாறுதலைப் பெற ஒரே ஒரு வழியே உள்ளது. அதை நீங்கள் ஒருக்காலும் மறந்து போக வேண்டாம். பிதாவினிடத்திற்குச் செல்வதற்கான ஒரே வழி - இயேசு கிறிஸ்து; பரலோகத்திற்கு செல்லவதற்கான ஒரே வாசல் - இயேசு கிறிஸ்து; உங்கள் இருதயம் சமாதானத்தை அடைவதற்கான ஒரே பாதை - இயேசு கிறிஸ்து.

இந்த கைப்பிரதியைப் படிக்கிற நீங்கள், ஒருவேளை கிறிஸ்துவின்மூலம் உங்கள் பாவத்திலிருந்து மீட்கப்பட விரும்பியும், இன்னும் அதற்கான முயற்சியை எடுக்காமலிருக்கலாம். அப்படியானால் இப்போதே கிறிஸ்துவிடம் வாருங்கள் என்று உங்களை வருந்தி கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் ஒரு பயங்கர பாவியாயிருந்தாலும், வாருங்கள். அநேக நாட்களாக எச்சரிக்கைகளையும், பிரசங்கங்களையும் அசட்டை செய்திருந்தாலும், வாருங்கள். எல்லாவிதமான தீய செயல்களிலும் ஈடுபட்டிருந்தாலும், கவனமற்ற வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும், வாருங்கள் - கதவு இன்னும் அடைக்கப்படவில்லை. தாமதியாமல் வாருங்கள் என்று இயேசு உங்களை அழைக்கிறார்!

## வாருங்கள், இரட்சிப்படையுங்கள்

இரட்சிப்படைவது என்பது, இந்த வாழ்க்கையில் பாவத்தின் கட்டுகளிலிருந்து விடுதலை அடைந்து, கிறிஸ்துவின் ஆவியானவர் கிரியையினால் புதிய குணத்தைப் பெற்றுக் கொள்வதாகும்; பாவம், உலகம், பிசாசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலைப் பெறுவதும், பரிசுத்த ஆவியானவரால் புதிய குணத்தைப் பெற்றுக் கொள்வதுமேயாகும். ஆகவே பரிசுத்த ஆவியானவரால் புதுப்பிக்கப்பட்டவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்பட்டவர்கள். அவர்கள் அழிந்து போக மாட்டார்கள். அவர்கள் தேவனுடைய மகிமையான இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

இரட்சிக்கப்படுவது என்பது நியாயத்தீர்ப்பு நாளன்று பாவத்தின் கொடூர விளைவுகளிலிருந்து விடுவிக்கப்படுவதாகும். அதாவது மற்றவர்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படும்போது, நாம் பழுதற்றவர்கள், கறைதிரையற்றவர்கள் குற்றமற்றவர்கள். கிறிஸ்துவில் சம்பூரணர் என்று அழைக்கப்படுவதாகும். அது மற்றவர்கள், "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு போங்கள்" (மத்தேயு 25:41) என்ற பயங்கரமான வார்த்தைகளைக் கேட்கும் போது, நாம் "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே" (மத்தேயு 25:34) என்ற ஆறுதலின் வார்த்தையைக் கேட்பதாகும். "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" (ஏசாயா 1:18) "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறாள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்' (வெளிப்படுத்தல் 22:17)

தேவன், தம்முடைய ஒரேபேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

A HEAVENLY INVITATION (Tamil)


*எங்கள் முகவரி:*

**இந்திய வேதாகம இலக்கியம் (IBL)**

67, பெராக்கா சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

Phone : 044 26425166 / 26420077
Email : *ibl.maa@iblchennai.org*
Website: www.iblministries.in


# ஒரு பரலோக அழைப்பு



# ஒரு பரலோக அழைப்பு

> “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (மத்தேயு 11:28)

இந்த அழைப்பை விடுப்பவர், நீங்கள் அடையக் கூடிய மாபெரிய, தலைச்சிறந்த நண்பராவார். இந்த அழைப்பைக்கொடுத்த மாபெரிய, தலைச்சிறந்தவரை நீங்கள் நண்பராகப் பெற்றிருப்பது அரும்பெரும் பேறாகும். அவர் தேவனுடைய நித்திய குமாரனான ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆவார். அவர் நம்மை அதிகதிகமாய் நேசித்ததினால் தேவனுக்கு நாம் கொடுக்க வேண்டிய பெரிய கடனை, கல்வாரி சிலுவையில் மரணம்மூலமாய் செலுத்தி விட்டார். அவர் சர்வ வல்லவர். தேவனுடைய குமாரன். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறார் – அவர் தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ஒரு நாள் இந்த பூவுலகின் நியாயாதிபதியாகவும் இராஜாவாகவும் வருவார். இப்பேர்ப்பட்ட ஒருவர் அழைப்பதால் நீங்கள் தைரியமாக நம்பி வரலாம்.

அவர் உங்களை அதிகமாய் நேசிப்பதினால், தம்மிடத்தில் வரும்படி உங்களை அழைக்கிறார். அவர் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவார். பாவ பாரத்தை உணர்ந்தீர்களானால், இயேசு, “என்னிடத்தில் வாருங்கள்” என்று உங்களை அழைக்கிறார். கவனியுங்கள், உங்களுடைய இரட்சிப்பிற்காக நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்றோ, கிரயம் செலுத்த வேண்டுமென்றோ, ஏதோ ஒருவரிடம் செல்லும்படியோ அவர் சொல்லவில்லை. அவர் உங்களுக்கு கொடுக்கும் அழைப்பு, “என்னிடத்தில் வாருங்கள்” என்பதாகும். மேலும் அவர், “என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை” (யோவான் 6:37) என்று வாக்களித்திருக்கிறார்.

## கல்வாரி என்றழைக்கப்படும் இடம்

“கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அவரையும் அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்பொழுது இயேசு, “பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே,” என்றார் (லூக்கா 23:33,34). குற்றவாளிகளில் ஒருவன், இயேசுவை நோக்கி, “ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்” என்றான். இயேசு அவனை நோக்கி “இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்றார் (லூக்கா 23:42,43).

அந்த சமயத்தில் கல்வாரி சிலுவையைச் சுற்றி இயேசுவின் தாயாகிய மரியாள், இயேசுவுக்கு அன்பான சீஷன் யோவான், மகதலேனா மரியாள், மற்றவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். மரிக்கும் திருடன் இவர்கள் யாரிடத்திலும் கேட்கவில்லை, நேராக தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தரான இயேசுவிடமே கேட்டான். அவன் இயேசுவிடம் வந்தான். இயேசு அவனுக்கு இளைப்பாறுதலையும், இரட்சிப்பின் ஆசீர்வாதத்தையும் கொடுத்தார்.

ஆண்டவராகிய இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்று வாழ்பவனே உண்மையான கிறிஸ்தவன். இயேசுவின்மீது தன் முழு நம்பிக்கையையும் வைத்து ஒரு விசுவாச வாழ்க்கையை வாழ்பவன். தன்னுடைய சகல காரியங்களையும் இயேசுவிடம் ஒளிவு மறைவின்றி கூறி, அவர்மேல் சார்ந்து, ஜெபத்தின்மூலம் அவரோடு பேசி, அவருக்காய் உழைத்து, அவரை நேசித்து, அவர் திரும்பி வரக் காத்திருப்பான். பரிசுத்த பவுல் “நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்” (கலாத்தியர் 2:20) என்று கூறியுள்ளார். எங்கு உண்மையான விசுவாசமும், நம்பிக்கையும் காணப்படுமோ, அங்கு இயேசு ஜீவிக்கின்ற நெருங்கிய நண்பனாக இருப்பார்.

## இயேசு அளிக்கும் இளைப்பாறுதல்

கிறிஸ்து கொடுக்கும் இளைப்பாறுதல் உள்ளான, ஆத்மீக இளைப்பாறுதலாகும். அது இருதயத்தின் இளைப்பாறுதல், மனசாட்சியின் இளைப்பாறுதல், மனதின் இளைப்பாறுதல், நம் சித்தத்தின் இளைப்பாறுதல், உங்களுடைய பாவமெல்லாம் மனிக்கப்பட்டு, குற்றம் நீக்கப்படுவதால் உங்களுக்குக் கிடைக்கும் இளைப்பாறுதல். நம் ஆண்டவர் இயேசு தம்மிடம் வருகிறவர்களுக்கு தாம் சிலுவையில் நிறைவேற்றிய வேலையைக் காண்பித்து, அவர்களைத் தமது பூரண நீதியினால் உடுத்தி, தமது விலைமதிப்பிட முடியாத தூய இரத்தத்தினால் கழுவுவதின்மூலம் இந்த இளைப்பாறுதலைக் கொடுக்கிறார். ஒரு மனிதன், தேவனுடைய குமாரன் தன்னுடைய பாவங்களுக்காக மரித்தார் என்பதை உணர்ந்து கொள்ளும்போது உள்ளான சமாதானத்தைப் பெறுகிறான்.